| | | |
|---|---|---|
| **குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நான்குநேரி**<br>**முன்னிலை - திரு. R.பூமிநாதன், B.Sc.,B.L.,**<br>**நீதித்துறை நடுவர், நான்குநேரி**<br>**2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**<br>**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 611/2019**<br>**CNR No. TNTL 20-001403-2019** | | |
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>மூலைக்கரைப்பட்டி காவல்நிலையம்,<br>குற்ற எண். 36/2018. | | **.... குற்றமுறையிட்டாளர்** |
| **/எதிர்/** | | |
| 1) | பிரகாசம், வயது 40/2018,<br>த/பெ. அந்தோணி,<br>குரும்பூர். | |
| 2) | அன்னம்மாள், (இறப்பு)<br>க/பெ. சவரி நாயகம்,<br>ஸ்ரீவைகுண்டம். | **.... 1 வது குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

இவ்வழக்கானது கடந்த 15/11/2019-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 14/07/2026-ம் தேதி இன்று வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 திரு.மைக்கேல் ஜெரால்டு அவர்கள்

ஆஜராகியும், 1வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.M.சுப்பையா அவர்களும் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

## வழக்கின் விபரங்கள்

| வ. எண் | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | மூலைக்கரைப்பட்டி காவல் நிலையம் குற்றஎண். 36/2018 | |
|---|---|---|---|
| 1 | 1வது குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | பிரகாசம் |
| | | தந்தை பெயர் | அந்தோணி |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | குரும்பூர் |
| | | வயது | 40/2018 |
| 2 | 2 வது குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | அன்னம்மாள் (இறப்பு) |
| | | கணவர் பெயர் | சவரி நாயகம் |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | ஸ்ரீவைகுண்டம் |
| | | வயது | 60/2018 |
| 3 | சம்பவ தேதி | | 01/03/2018 |
| 4 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 15/11/2019 |
| 5 | கைது<br>1வது குற்றம்சாட்டப்பட்டவர்<br>2 வது குற்றம்சாட்டப்பட்டவர் | | 16/04/2018<br>16/04/2018 |
| 6 | பிணையில் விடுவித்தல்<br>1வது குற்றம்சாட்டப்பட்டவர்<br>2 வது குற்றம்சாட்டப்பட்டவர் | | 16/04/2018<br>16/04/2018 |

| | | |
|---|---|---|
| 7 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | 23/01/2026 |
| 8 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 22/05/2026 & 22/05/2026 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 22/05/2026 & 22/05/2026 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | 04/07/2026 & 04/07/2026 |
| 9 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 06/07/2026 |
| 10 | விசாரணை முடிவு | 14/07/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | 17/07/2026 |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான காண்முடிவு /முடிவு | 17/07/2026 |
| 13 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u>**:

கடந்த 01.03.2018 ம் தேதி காலை 9.00 மணியளவில் குரும்பூர் பரவர் தெருவைச் சேர்ந்த பிரகாசம் என்பவர் சாட்சி-1ன் ஊருக்கு அன்னம்மாள் என்பவரை கூட்டிக்கொண்டு சாட்சி-1ன் வீட்டின் முன்பு வந்து சாட்சி-1ன் தம்பியை எங்கே என்று கேட்கவும், அதற்கு அவன் பள்ளிக்கூடம் வேலைக்கு சென்றுவிட்டதாக கூறிய உடனே அவர்கள் சாட்சி-1யையும், அவரது அம்மாவையும் தகாத வார்த்தைகளால் பேசி இன்று சாயங்காலம் என்ன நடக்குது பார் என்றும், உன் தம்பியை வெட்டாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் படியும், 2 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(1)ன் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **<u>2 வது எதிரி இறந்து விட்டார் என்பதற்கான உத்தரவு :</u>**

வழக்கின் 2வது எதிரி அன்னம்மாள் கடந்த 15.04.2023 அன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பில் இறப்புச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலினை செய்யப்பட்டு 2வது எதிரிக்கு எதிரான இவ்வழக்கின் குற்றச்சாட்டு நீக்கறவு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1வது எதிரிக்கு கு.வி.மு. ச. பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல் :</u>**

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 1வது எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, 1வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், 1வது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

4) **<u>குற்றச்சாட்டு வனைதல் :</u>**

1வது எதிரிக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது 1வது குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

5) **<u>அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

அ.சா.3 சகாய ராபின் ஷாலு தனது சாட்சியத்தில் தான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 03.03.2018 ஆம் தேதி 20.00 மணிக்கு முதல்நிலை காவலர் 1811 கார்த்திக் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது வாதி பிளாரட் லியோன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.2 புகார்

மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 36/2018 இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் 4 of TNPHW Act என்ற வழக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்துள்ளார் என்றும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் வினுக்குமார் அவர்கள் விசாரணை நகலை எடுத்துகொண்டு அன்றைய தினம் 21.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் ஜேசுமணி, பிரபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், சாட்சிகள் பிளாரட் லியோன், மரிய கிரேஸ் நவமணி, லிபோரோஸ், பார்வை மகஜர் சாட்சிகளான ஜேசுமணி, பிரபு, வழக்கு பதிவுசெய்த முதல்நிலை காவலர் கார்த்திக் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனுவின் அடிப்படையிலும் புலன் விசாரணையிலும், சாட்சிகளின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரி குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் 28.03.2018 ம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் 4 of TNPHW Act ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

6)**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :

இவ்வழக்கில் அ.சா.1ம் 1வது எதிரியும் சமாதானமாக செல்வதாக மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கில் அ.சா.1 புகார்தாரர் மற்றும் அ.சா.2 கண்ணுற்ற சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், ஏனைய சாட்சிகளை விசாரிப்பதில் நீதிமன்ற நேரம் விரையமும், மேலும் ஏனைய சாட்சிகள் விசாரிப்பதினால் வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படபோவதில்லை என்பதால் அரசு தரப்பில் பட்டியலிடப்பட்ட 8 சாட்சிகளில் 5 சாட்சிகளை அரசு தரப்பு விலக்கிக் கொண்டு விசாரணை அதிகாரி அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து 1வது எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து 1வது எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது 1வது எதிரி பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

8) **அரசு தரப்பு வாதம்**:

அரசு தரப்பில் அ.சா. 1,2,3 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.3 புலன் விசாரணை சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 ஆவணங்களின் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டுக்களை 1வது எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் 1வது எதிரிக்கு அதிகபட்ச தண்டணை வழங்கும் படி வாதிடப்பட்டது.

9) **1வது எதிரி தரப்பு வாதம்**:

1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1,2 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ள நிலையில் 1வது எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், ஆகையால் சந்தேகத்தின் பலனை 1வது எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

10) **குற்றச்சாட்டு மீதான விவாதம்** :

1வது எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

11) **தீர்வு**:

(i) அ.சா.1,2 ன் சாட்சியத்தை ஆராய்கையில் 1வது எதிரி அ.சா.1ன் வீட்டின்

முன்பு வந்து அ.சா.1ன் தம்பியை எங்கே என்று கேட்டதாகவோ, அதற்கு அவன் பள்ளிக்கூடம் வேலைக்கு சென்றுவிட்டதாக கூறிய உடனே 1வது எதிரி அ.சா.1யையும், அவரது அம்மாவையும் தகாத வார்த்தைகளால் பேசி இன்று சாயங்காலம் என்ன நடக்குது பார் என்றும், உன் தம்பியை வெட்டாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவோ சாட்சியங்கள் அளிக்கப்படவில்லை. அதாவது அ.சா.1ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசிலினை செய்ததில்,

> "*வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், எதிரியுடன் சமாதானமாக செல்கிறேன் என்றும், சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும், வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

எனவே அ.சா.1 முதல் விசாரணையில் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும்

> அ.சா.2ன் தனது சாட்சியத்தில் "*வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை*" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1,2 சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாக பாவித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் 1வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் பொருண்மை எதுவும் அமையவில்லை. அ.சா.3 விசாரணை அதிகாரி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். 1வது எதிரிக்கு எதிரான குற்றசாட்டுக்களை பொறுத்து தனிநபர் சாட்சியம் எதுவும் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.3 விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக கொண்டு 1வது எதிரிக்கு

எதிராக குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

12) **இறுதியாக**, அரசு தரப்பில் 1வது எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை 1வது எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் 1வது எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(1) மற்றும் பிரிவு 4 of TNPHW Act படியும் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி 1வது எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

13) **<u>வழக்கு சொத்து மீதான உத்தரவு</u>** :

இவ்வழக்கின் சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு சொத்து குறித்து எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.17 18:41:24 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. பிளாரட்லியோன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. லிபோரஸ் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திருமதி. சகாய ராபின் ஷாலு (உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 03/03/2018 ம் தேதியிட்ட புகார் மனுவில் உள்ள கையெழுத்து அ.சா.1ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 03/03/2018 ம் தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 03/03/2018 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 03/03/2018 ம் தேதியில் பதிவு செய்த பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 03/03/2018 ம் தேதியில் பதிவு செய்த மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை

**1வது எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**-

இல்லை

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.17 18:41:32 +0530

நீதித்துறை நடுவர்,

நான்குநேரி.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது 1வது எதிரி பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 4. | 1,2 எதிரிகளால் பிறப்பிக்கப்பட்ட பிணைபத்திரம் இன்றிலிருந்து 1 மாத காலத்திற்கு பின்பு தானாகவே இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |
| 5. | 1வது எதிரியால் கு.வி.மு.ச. பிரிவு 437(A) Cr.P.C. -ன் கீழ் பிறப்பித்த பிணைபத்திரம் 6 மாத காலத்திற்கு பின்பு தானாக இரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது. |